கவன ஈர்ப்புகள்

[திரு ப. பொன்னுரங்கம்]

என்று சொல்லப்படுகிறது. அந்த விவரத்தை வேண்டுமானால் நான் படித்து விடுகிறேன்....(குறுக்கீடு) அமைச்சரிடத்திலேயே கொடுத்துவிடுகிறேன். எனவே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி யுனிவர்சிட்டியோடு தொடர்பு கொண்டு அந்த மாணவிகளுக்குத் தக்க மார்க் கொடுக்க ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். பிளஸ் 2 தேர்விலும் கூட இதே நிலைமைதான் என்று நான் அறிகிறேன். எனவே இதுபற்றிக் கவனித்து உரிய மார்க் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அந்த வகையில் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினை சம்பந்தமாக ராணி மேரி கல்லூரி மாணவிகள் தான் தங்களுடைய குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகு எத்திராஜ் கல்லூரியில் இருந்தும் புகார் வந்திருக்கிறது. இந்த இரண்டு கல்லூரிகள் தவிர மற்ற கல்லூரிகளில் இருந்து எந்தப் புகாரும் வரவில்லை. ஆகவே தவறுக்குக் காரணம் பல்கலைக் கழகம் அல்ல என்பதும் சம்பந்தப்பட்ட கல்லூரிகளிலே சொல்லித் தந்தவர்கள்தான் குறைபாட்டுக்குக் காரணமாக இருப்பார்கள் என்பதற்கு இடம் இருக்கிறது. எப்படியோ மாணவிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட மாணவிகளைப் பொறுத்தவரையில் ஒரு அனுதாபத்தோடு இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(23) கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலக்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏலக்காய்க்கு போதுமான விலை இல்லாமையாலும், கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமையாலும், தாங்கள் உற்பத்தி செய்துள்ள ஏலத்தை விற்க முடியாமல் ஏல விவசாயிகள் படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

ஏலக்காயின் விலை உள்நாட்டில் விளையும் உற்பத்தி, தேவை மற்றும் வெளிநாடு ஏற்றுமதி போன்ற பல்வேறு காரண கூறுகளைப் பொறுத்து உள்ளது. ஏலக்காய் உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

		1984–85 (மெ. டன்.)
1	கேரளம்	2,850
2	கர்நாடகம்	850
3	தமிழ்நாடு	250

தமிழகத்தில் ஏலக்காய் 1984–85 ஆம் ஆண்டில் 6,632 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்தன. ஏலக்காய் உற்பத்தியில் கேரளம் முதலிடம் வகிக்கிறது. கர்நாடக மாநிலத்தை அடுத்து தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் உற்பத்தியானது அண்டை மாநிலங்களைப் போல் உற்பத்தி அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கம்பம், தேனி போன்ற இடங்களில் உள்ள ஏலக்காய் உற்பத்தியாளர்களின் ஏலத் தோட்டம் கேரள மாநிலத்திற்குள் அமைந்துள்ளது. ஏலக்காய் விற்பனை, உற்பத்தி ஆகியவைகள் பதிவு செய்து, ஒருங்கிணைந்த முறையில் விற்பனை, ஏலம் விடுதல் மற்றும் ஏற்றுமதி போன்ற பணிகளை மேற்கொள்ள மைய அரசின் கீழ் இயங்கி வரும் ஏலக்காய் வாரியம் கவனித்து வருகிறது. இந்த வாரியம் கொச்சியினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இவ்விலை வீழ்ச்சியை குறித்து நடவடிக்கை எடுக்க ஏலக்காய் வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் இந்த ஏலக்காய் உற்பத்தியைப் பொறுத்த வரையில் மைய அரசின் பொறுப்பிலுள்ள ஏலக்காய் வாரியம் தான் கவனித்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஏலக்காய் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு அவர்களுடைய உற்பத்திச் செலவு கூட அடங்காத அளவுக்குத்தான் அவர்கள் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது குறித்து மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தோ அல்லது மாநில அரசே கொள்முதல் செய்து அவர்

கவன ஈர்ப்புகள்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் ஏலம் போடுவதிலும் தமிழகத்திற்குத் தேவையான பிரதிநிதித்துவம் வாங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை நாம் ஏலக்காய் நல வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

(முற்பகல் 10-30)

24. உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராம மேல்நிலை குடிநீர் தொட்டி செயல்படாதது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராமத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி செயல்படாததால் அப்பகுதி மக்கள் வறட்சிக்காலமான இந்த நேரத்தில் குடிநீருக்காகக் கஷ்டப்படும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விக்கிமரங்கலம் கிராமத்தில் 1969ஆம் ஆண்டில் ஒரு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு தெருக்குழாய்களின் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. கடந்த ஆண்டில் பருவமழை தவறியதால் ஏற்பட்ட வறட்சி காரணமாக கிணற்றிலுள்ள நீர் குறைந்து விட்டதால் மேல்நிலைத் தொட்டியிலுள்ள நீரைத் தெருக் குழாய்களின் வழியாக உபயோகித்தால், நீர் வீணாவதைத் தடுக்கும் வகையில், மக்கள் தாங்களாகவே கிணற்றிலுள்ள தண்ணீரை வாளிகளை உபயோகித்து பயன்படுத்தி வருகின்றனர். மேலும் தற்போதைய குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் மாற்று வழியாக மேற்படி மேல்நிலை குடிநீர் கிணறு ஆழப்படுத்தப்பட்டு, தற்போழுது 3 அடி தண்ணீருக்கு மேல் உள்ளது.

மேலும் கடந்த ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வாரியத்தினால் ஆழ்துளை கிணறொன்று அமைக்கப்பட்டு, குழாய்கள்அமைக்கும் பணி தற்போது முடிவுறும் நிலையிலுள்ளது. இப்பணி இன்னும் 15 தினங்களில் முடிக்கப்பெற்று மேல்நிலைத் தொட்டியின் வழியாகக் கிராம மக்களுக்குப் போதுமான குடிநீர் விநியோகிக்கப்படும்.